உ

சிவமயம்



அல்வாய் வடக்கு, வியாபாரிமூலை
சைவமரபில் வழிவந்த

# திருமதி
# பூரணம் கதிரவேற்பிள்ளை

அவர்களின் மறைவு குறித்த

# நினைவு மலர்

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

## 04–03–2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி

# பூரணம் கதிரவேற்பிள்ளை



பிறப்பு
30-07-1913

மறைவு
03-02-2000

## திதி வெண்பா

ஆண்டு பிரமாதி வையகத்துறங்கும்
தைமாதம் சந்தித்த அபரபக்க திரயோதசி
மதியவேளை மாது பூரணம்
கூடுவிட்டு இறை கழல் சேர்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் மவனுக்கே பிச்சியானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ யருளிலை யானாய்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிக்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற வுழறி யுமை மணவாளனுக்காய்ப்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டுகூறுதுமே

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞான மதம் ஐந்துகரம் மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி யஞ்சலி செய்கிற்பாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளை யோனே கதிர்காமப் பெருமானே'

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக யுலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே.
பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கட்படுமே.

-நெடுஞ்செழியன்

## கடமை

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ் சமம் முருகிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

-பொன்முடியார்

## நானிலம்

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புலன் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

-தொல்காப்பியம்

## கவி

புவியிறுக்கு அணியாய் ஆன்று பெருள் தந்த புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவிரியினை வீரர் கண்டார்

-கம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே

தந்தையின் தந்தை யெங்கே தமரொடும் பிறருமெங்கே
எந்தையின் முன்னோ ரெங்கே எழுபது லட்சமெங்கே
அந்தகோ அன்னா ரெல்லாம் அவனியிற் சென்றதெங்கே
இந்த நா ளொருத்தன் நானோ இருள்வழித் தனித்துநிற்பேன்

- யாழ்ப்பாணன்

''இழந்து விட்ட சூரியனுக்காக
எப்போதும் அழுவதை விட
உனக்குக் கிடைத்துள்ள நட்சத்திரங்களை ரசிக்கப் பழகு''

- தாகூர்

''முத்துக் குளிக்க வேண்டு மென்றால்
மூச்சு அடக்கத்தானே வேண்டும்''

''மனிதர்களிடம் குறையில்லையென்றால்
பணிவு தோன்றாது''

''பிறர் துன்பத்தைக் கண்டு துன்பப்படுபவர்களும்
பிறர் சுகத்தைக் கண்டு ஆனந்தப்படுபவர்களுமே
மனிதர்கள்''

## வாயுமகன்

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாக
ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டயலா ரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் நம்மை அளித்துக் காப்பான்.

## சிவபெருமான்

பேரான ஈரெழுத்தை முடியிலேற்றான்
பின்வந்த ஈரெழுத்தை இடக்கை ஏற்றான்
சீரான ஈரெழுத்தை வலக்கை ஏற்றான்
சிறப்பான ஈரெழுத்தில் ஏறிக் கொண்டான்
காரான ஈரெழுத்தை மிடற்றிலேற்றான்
கருணை செய்யும் ஈரெழுத்தை பாகம் கொண்டான்
ஆராலும் இதன் பொருளை அறிந்து சொல்லில்
அவர்கள் தம்மைப் புலவரென அறியலாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னன்**

நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான் உயிர் என்பது அறிகை
வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே
-மோசிகீரனார்

# வாழ்க்கைக் குறிப்பு

சைவமதச் சான்றோர் வாழ
கல்விச் சிறப்புடையோர் பலரும் வாழ
கவினுறு பயிர்கள் செழித்து வளர
கடலலையும் வந்து தொட்டுச் செல்ல
வாணிபமும் வளர்ந்தோங்க
வளமுடைய சான்றோர் வாழும் வியாபாரிமூலைதன்னில்
இராமலிங்கம் செல்லம்மா என்பவர் இல்லற வாழ்வில்
இனிதே உதித்திட்டாள் பூரணம் என்பாள்.

அண்ணன்மார் அக்கா தம்பி அம்மா
அன்பின் அரவணைப்பில் சிறு நடை நடந்து
சீருடன் சிறப்புடன் வளர்ந்து
சைவமும் தமிழும் சைவ பாலிகா பாடசாலையில்
சான்றுறக் கற்று தன் இருபதாம் வயதில்
பரமுப்பிள்ளை தலை மகன் கதிரவேற்பிள்ளையை கரம் பிடித்தனள்

வேலையாள், சாதாரணம், பிள்ளை,குழந்தைஎன
பங்கீட்டு விநியோகத்தை பரிவுடன் மேற்கொள்ளும்
உத்தரவு பெற்ற வியாபாரியாம் கதிரவேற்பிள்ளை
பொருள் செல்வம் பெரிதும் பெற்று
மகிழ் துணை மனைவி பூரணத்துடன்
மகிழ்ந்து வாழ்ந்து குழந்தைச் செல்வம் வேண்டி நிற்க
பதினாறாம் ஆண்டில் வந்து பிறந்தான் மூத்த புத்திரன் கதிரமலை
அதன்பின் ஆண்டு மூன்று செல்ல வந்து சேர்ந்தாள் தேவேந்திரா
அடுத்து மகேந்திராணியும் வந்துதித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைச் செல்வம் வந்திட பொருள் செல்வம் கரைந்திட
வாழ்வில் செம்மை - வறுமையில் கல்வி
என்ற வைராக்கியத்துடன் வளர்த்தனர் தம் பிள்ளைகளை
பிள்ளைகள் படித்து வளர்ந்து
அதில் இருவர் ஆசிரியரானதில்
பெருமை கொண்டாள் பெற்றதாய் பூரணம்.

கதிரமலையும் இராஜலட்சுமியும் கடிமணம் புரிய
தேவேந்திரா அழகையா புத்திரன் தங்கவேலாயுதத்தை நறு
மணம் புரிய
அவர்களின் சதிபதி வாழ்வில் சவுதியில்
பேரன் வேல்கஜாவும் பெருமையுடன் தோன்றினான்.
மகேந்திராணியும் நடராசாவைக் கைப்பிடித்தனள்.

காலம் பல சென்றது
முதுமையும் வந்தது
போதும் இவ்வுலக வாழ்வு என்று
புது உலக வாழ்வு பெறச் சென்றனள் என் தாய்.

ஆக்கம்:

**க. கதிரமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி

**திருமதி. பூரணம் கதிரவேற்பிள்ளை**

அவர்களின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டவர்கள், ஆறுதல் கூறியவர்கள், பல்வேறுவழிகளில் உதவிசெய்தவர்கள், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கள் ஆகிய உற்றார், உறவினர், நண்பர்கள், இயக்குநர், விரிவுரையாளர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், உயர்தொழில்நுட்ப மாணவர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகள்.

இன்று அந்தியேட்டி,, சபிண்டீகரண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்து வைத்திய உதவி வழங்கிய வைத்திய கலாநிதி வேலும்மயிலும் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

**மக்கள், மருமக்கள், பேரன்.**

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
04 - 03 - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org